காலை முரசு

பக்கங்கள் 26

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை 27.07.2025 | அதிர்வு 357

## பொலித்தீன் பை நேற்று அடையாளம்

### எலும்புக் குவியல்கள் இருப்பதாகச் சந்தேகம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ். செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் 02 ▶



# செம்மணியில் 100+

## நேற்று மட்டும் 11 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்
## ஒரே நாளில் அதிக என்புத் தொகுதிகள் கண்டுபிடிப்பு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின்போது 11 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 100 ஐத் தாண்டியுள்ளது.** 02 ▶



# இதுவரை 46 சான்றுப்பொருள்கள் மீட்பு!

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று வரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது 46 சான்றுப்பொருள்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில்அடையாளம்காணப்பட்டமனிதப் புதைகுழியில் முதலாம் கட்டமாக 9 நாள்கள் இடம்பெற்ற அகழ்வு மற்றும் 02 ▶






வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைப்பது' என்பார்கள். பெரும்பாலும் பல அரசியல்வாதிகளும் அந்த வேலையைத்தான் செய்கிறார்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ப்பட்டு, தடுப்புக் காவலில் இருந்த 16 பேர் சம்பந்தப்பட்ட வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அந்த விடுவிப்புச் செய்தியைப் பகிர்ந்ததன் மூலம் அவர்களை தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்து விடுவித்த மாதிரியான ஒரு படத்தை தேசிய மக்கள் சக்தியின்எம்.பி. ஒருவர் காட்ட முயற்சித்திருக்கின்றார். அதனை முகப்புத்தகம் ஒன்றில் அன்பர் ஒருவர் 02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

அம்பலப்படுத்தி ஒரு கிழி கிழித்து இருக்கிறார். அதனை இன்று அப்படியே தருகிறேன். அதன் விவரம் இதுதான்:

தோழர் இளங்குமரன் பகிர்ந்துள்ள இந்தச் செய்தியின் அடிப்படையில் 16 பேர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதான பொய்யான தகவல்களை தேசிய மக்கள் சக்தியினர் பரப்புரை செய்கின்றார்கள்.

குறித்த 16 பேரும் 2020 ஆம் ஆண்டளவில் கைதாகி இருந்தார்கள். பின்னர் பலரது முயற்சியாலும் அவர்களது சட்டத்தரணிகளாலும் கடந்த 2022 ஆம் ஆண்டு பிணையில் விடுதலையானார்கள்.

தற்பொழுது அவர்கள் வழக்குகளில் இருந்து விடுதலையாகி இருக்கின்றார்கள்.

இது சட்டரீயாக எடுத்த முயற்சிக்குக் கிடைத்த பலன்.

மேற்குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னராக, குற்றச்சாட்டுப் பத்திரத்திற்கு எதிராக சட்ட ரீதியான பூர்வாங்க ஆட்சேபனைகள் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டன.

குற்றப் பத்திரிகையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டவை எனவும், அந்தக் குற்றச்சாட்டுக்கள் யாவற்றுக்குமே வடக்கு மாகாணம் அல்லது கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள மேல் நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசமைப்பு யாப்பின் பிரமாணங்களுக்கு அமைவாகவும் மாகாண நீதிமன்றங்கள் விசேட சரத்துக்களின் கீழும் நியாயாதிக்க அதிகாரம் கொழும்பு நீதிமன்றத்திற்கு இருக்கவில்லை எனவும் வாதிடப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, பயங்கரவாத தடைச்சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டிருக்கும் ஒழுங்கு விதிகள் மற்றும் வறிதானவையும் ஆகும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, இலங்கைக் குற்றவியல் நடைமுறைக் கோவையின் 16ஆம் அத்தியாயத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள விதிமுறைகள் பிரகாரம் குற்றச்சாட்டுகள் அமையவில்லை என்ற கருத்தும் சட்டத்தரணிகளால் நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் செவிமடுத்து அதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூலமான கருத்துக்களையும் கருத்தில் கொண்ட நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பதினாறு பேரையும் முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபணைகளில் திருப்தியடைந்து, விசாரணையை தொடங்காமலேயே குற்றஞ்சாட்டப்பட்ட பதினாறு தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் கே.எஸ். இரத்தினவேல், ரணித்தா ஞானராஜா, சுரங்க பண்டார, சுவாதிக்கா ரவிச்சந்திரன், கேதினி பாக்கியராசா மற்றும் வொஷான் ஹேரத் ஆகியவர்கள் மன்றில் பிரதிநிதித்துவம் செய்தார்கள். வழக்கு தொடுநர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி உதார கருணாதிலக்க, அரச சட்டத்தரணி சுஜித் பண்டார ஆகியவர்கள் தோன்றினார்கள். – என்று தெரிவிக்கப்பட்டது.

### பொலித்தீன்...

காணப்பட்ட மனிதப் புதைகுழியின் தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இரண்டு என நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில் நேற்று அகழ்வுப் பணிகள் இடம்பெற்றபோது பொலித்தீன் பை ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதனுள் எலும்புக் குவியல்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றன.

அந்தப் பொலித்தீன் பை முழுமையாக



சுத்தப்படுத்தப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டதன் பின்னரே அது பற்றிய விவரங்கள் கிடைக்கப் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இதுவரை...

இரண்டாம் கட்டமாக 21 நாள்கள் (நேற்று வரை) இடம்பெற்ற அகழ்வில் 46 சான்றுப்பொருள்கள் அடையாளம் காணப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை சிறுவர்களின் பாடசாலைப் புத்தகப் பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை, காற்சங்கிலி, சிறு வளையல், இரும்புக் கட்டிகள், போத்தல், பாதணிகள், சிறுமிகளின் ஆடைகள், கற்கள், பிளாஸ்டிக் மாலை உள்ளிட்ட 46 சான்றுப் பொருள்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடதக்கது.

### செம்மணியில்...

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 21ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின்போது 11 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 9 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 101 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு 90 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான





குழுவினர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# தமிழின அழிப்புக்குச் சர்வதேச நீதி கோரி மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டம்

(கனகராசா சரவணன்)

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்புக்குச் சர்வதேச நீதிப் பொறிமுறை கோரி நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு, காந்தி பூங்காவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி சிறிநாத் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் சிவம் பாக்கியநாதன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.






# சூதாட்ட குற்றச்சாட்டில் 16 பேர் நேற்று கைது!

களுத்துறை – வாத்துவை பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 13 பெண்கள் உட்பட 16 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாத்துவை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 3 வயது பிள்ளையும் அவரின் தாயும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவர்களிடம் இருந்து பணம் உள்ளிட்ட மேலும் பல பொருட்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.




# தமிழர்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு பன்னாடுகளின் தலையீடே தீர்வுக்கு ஒரேவழி

## இப்படிக் கூறுகின்றார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட கொடூர இனவழிப்பை மேற்கொண்ட சிங்களப் பேரினவாதம், தற்போது தமிழர்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச. செயற்பாட்டைக் கட்டவிழ்த்துவிட்டிருப்பதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே கடந்த காலத்தில் சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட தமிழ் இனவழிப்பிற்கும், மனிதப் புதைகுழிகள் விவகாரத்திற்கும், தற்போதைய கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளுக்கும் பன்னாடுகள் தலையீடு செய்து முறையான தீர்வினைப் பெற்றுத்தரவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் இனவழிப்பிற்கு பன்னாட்டு நீதிப்பொறிமுறையூடாக மாத்திரமே நீதி பெற்றுத்தரவேண்டுமென வலியுறுத்தி வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றய் முல்லைத்தீவு மாவட்டசெயலகத்திற்கு முன்பாக கவனவீர்ப்பு மற்றும் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்த நடவடிக்கையில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இலங்கையில் தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஏமாற்றப்பட்டுக் கொண்டிருப்பதுடன், அழிக்கப்பட்டுக்கொண்டும் இருக்கின்றனர்.

தற்போது வடகிழக்குத் தமிழர் தாயகப் பரப்பில் எங்குபார்த்தாலும் மனிதப்புதைகுழிகள் இனங்காணப்படுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் இந்த மனிதப் புதைகுழி விவகாரங்கள் பன்னாட்டுப் பொறிமுறையில் அகழ்வாய்வு செய்யப்படுவதுடன், இந்த மனிதப் புதைகுழி விவகாரங்களுக்கு பன்னாட்டு நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டுமென்பதே எமது தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

தற்போது எமது தமிழ் மக்களுடைய நிலங்கள் பறிக்கப்படுகின்றன. அண்மையில் வவுனியா வடக்கில் தமிழர்களின் பழந்தமிழ் கிராமங்களில் ஒன்றான வெடிவைத்தகல்லில் திரிவச்சகுளம் பகுதியில் மகாவலி அதிகார சபையால் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருப்பதை நேரில் சென்று பார்வையிட்டு, அந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தி அந்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம்.

இவ்வாறாகத் தொடர்ச்சியாக எமது தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்களையெல்லாம் அபகரித்து, பெரும்பான்மையினக் குடியேற்றங்களை மேற்கொண்டு, இனவாத அரசு எமது தமிழ்க்களை அடக்கி ஒடுக்கவேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்படுகின்றது.

இந்நிலையில் தற்போது ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த அரசாங்கம் இதற்கான ஒரு நியாயத்தை வழங்குமென்ற நிலையில் எமது தமிழ் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

நிச்சயமாகத் தமிழ் மக்களுக்கு உள்ளக விசாரணைகள் மீது நம்பிக்கை


தொடர்ச்சி▼














# தமிழர்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு பன்னாடுகளின் தலையீடே தீர்வுக்கு ஒரேவழி

## இப்படிக் கூறுகின்றார் ரவிகரன் எம்.பி.

தொடர்ச்சி▲

இழந்துள்ளனர்.

தமிழர் தாயகப்பரப்பில் இனங்காணப்படுகின்ற மனிதப்புதைகுழிகள் தொடர்பில் இனவாதத்தை வெளிப்படுத்தும் விதமாக மிக மோசமான வகையில் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த இனவாதிகள் கருத்துக்களை முன்வைத்து வருவதை அவதானிக்கக் கூடியவாறுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணம், செம்மணி சிந்துபாத்தி மனிதப்புதைகுழியில் சிறிய பிஞ்சுக் குழந்தைகளின் எலும்புக்கூட்டுத் தொகுதிகள் கூட இனங்காணப்படுகின்றன. இதன் மூலம் கடந்தகால இனவாத அரசுகள் எவ்வாறாக திட்டமிட்ட வகையிலான மிகக் கொடூரமான தமிழ் இன அழிப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளன என்பதை நன்கு உணரக் கூடியதாகவிருக்கின்றது.

எனவே இந்தக் கொடூரமான திட்டமிட்ட இனவழிப்புச் செயற்பாடுகளுக்கு பன்னாட்டு விசாரணையூடாக நீதியைக் கோருகின்றோம். பன்னாடுகளை, பன்னாட்டு மனிதஉரிமை அமைப்புக்களை, திட்டமிட்ட இவ்வாறான தமிழ் இன அழிப்பிற்கு நீதியைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த காலத்தில் எமது தமிழ் மக்கள் மீது இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட கொடூரமான இனவழிப்புச் செயற்பாடு இன்றுவரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மீது தற்போது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எமது தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதுடன், எந்தவித நிலத்தொடர்புமற்ற வகையில் விகாரைகள் அமைக்கப்பட்டு மதத் திணிப்புச் செயற்பாடுகள் தீவிரம் பெற்று வருகின்றன. இவ்வாறாக தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இதையெல்லாம் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காமல் பன்னாடுகள் தமிழ்மக்களுக்கானதொரு தீர்வைப் பெற்றுத்தர முன்வரவேண்டும்.

பலஸ்தீனத்தின் தீர்வு தொடர்பில் பேசும் பன்னாடுகள், இலங்கைத் தமிழர்களது தீர்வுதொடர்பில் கவனம் செலுத்தாமைக்கான காரணமென்ன? இலங்கை அரசாங்கத்தைக் கண்டும், இனவாதிகளைக்கண்டும் அஞ்சுகின்றீர்களா எனக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

தயவுசெய்து ஈழத்தமிழர்கள் விடயத்தில் பன்னாடுகள் கரிசனையுடன் செயற்படவேண்டும். ஈழத்தமிழர்களாகிய நாம் நியாயமான கோரிக்கைகளைத் தவிர வேறு எதனையும் கேட்கப் போவதில்லை.

வடக்கு கிழக்கென்பது தமிழர்களின் பூர்வீகத் தாயகமாகும். இந்த வடக்கு கிழக்கை ஈழத்தமிழர்களான நாம் முழுமையாக ஆட்சி செய்வதற்கான பொறிமுறையொன்றினை ஏற்படுத்தி, ஈழத்தமிழர்களிடம் வடக்குக் கிழக்கை ஒப்படையுங்கள் என்றுதான் கேட்கின்றோம். – என்றார்.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆளும் தரப்புத் தயாரா?

நீண்ட காலம் நடத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை இந்த வருட இறுதிக்குள் நிச்சயம் நடத்துவோம் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த சமயம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உறுதி கூறியிருந்தார்.

ஆனால், இப்போது இந்த ஆண்டில் தேர்தல் இல்லை, அடுத்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் நடக்கும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரியவும் அரசின் ஏனைய தலைவர்களும் கூறுகின்றனர். ஆனால் மாகாண சபைத் தேர்தல்கள் இப்போதைக்கு நடக்குமா என்று சந்தேகம் பல தரப்புகளிலும் எழுப்பப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்ற தேர்தலிலும் கிடைத்த பெருவெற்றி தொடர்ந்து வந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளும் தரப்புக்குக் கிட்டவில்லை. பெரும் பின்னடைவு ஏற்பட்டது. எதிர்பாராத அந்தச் சறுக்கலை அடுத்து மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதில் அரசு தயக்கம் காட்டுவதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன.

இப்போது மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து பணிகளை முன்னெடுக்குமாறு அரசுத் தலைமை அவர்களுக்கு ஆலோசனை வழங்கி உள்ளது என்று கூறப்படுகின்றது. இந்த சந்திப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனையும் மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகத்தை எழுப்புவதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர்.

மாகாண சபையில் மக்கள் பிரதிநிதிகள் மூலம் முன்னெடுக்க வேண்டிய விடயங்களை, ஆளுநரையும் அரசாங்க அதிகாரிகளையும் வைத்துத் தாமே நிர்வகித்து முன்னெடுக்க அரசாங்கத் தரப்பினர் முயற்சிக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம் சுமத்துகின்றார்.

“மாகாணசபை முறைமையென்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பாகும். எனவே, அத்தேர்தலை நடத்தி மக்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும்.” - என்று நளின் பண்டார வலியுறுத்துகின்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

“உள்ளாட்சி சபைத் தேர்தல் முடிவுகளுக்கு அஞ்சியா மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் பின்வாங்குகின்றது என்ற சந்தேகம் எழுகின்றது. முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்குச் சவால் விடுகின்றோம்.

“குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கிய ஒரு வாய்ப்புத்தான் மாகாணசபை முறைமையாகும். எனவே, வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து சபைகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மக்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.” - எனவும் நளின் பண்டார எம்.பி. குறிப்பிட்டார்.

பிரதான எதிர்க்கட்சியின் இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க அரசு தயாரா?



# தலைவர் பிரபாகரனின் பெயரை முன்வைத்து நடக்கும் நாடகங்கள்!



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வீரச்சாவு அடைந்து விட்டமையை உறுதிப்படுத்தி விட்டதாகக் கூறிக் கொண்டு, அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளை நடத்துவதற்கான முயற்சிகள், புலம்பெயர் நாடுகளில் சில தரப்பினரால் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர், மாவீரர் தினத்தினை முன்வைத்து தலைவரின் மகள் துவாரகா மக்கள் முன்தோன்றி, தமிழ் மக்களுக்கு உரையாற்றுவார் என்கிற நாடகம் அரங்கேற்றப்பட்டது. அந்த நாடகத்தில், துவாரகாவின் தாய் வழிச் சொந்தங்கள் சிலவும் துணைப் பாத்திரங்களை ஏற்று தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்தார்கள். ஆனால், துவாரகா பெயரில் அழைத்துவரப்பட்டவருக்கு நடிப்பு சுத்தமாக வரவில்லை. அவர், ஒரு போலி என்பதை சம்பந்தப்பட்ட நடிகை முகத்தை காட்டாமல் விட்டிருந்தாலும் கூட தமிழ் மக்கள் கண்டுபிடித்திருப்பார்கள். ஏனெனில், துவாரகா முள்ளியவாய்க்கால் இறுதி மோதல்களின் போது சாவடைந்துவிட்டார் என்பது வெளிப்படையான உண்மை. அந்த உண்மையை தாயகத்திலுள்ள மக்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். அதுபோலவே, தலைவர் பிரபாகரனும் மோதல்களத்திலேயே வீரனாக வீழ்ந்தார் என்பது உண்மை. அந்த உண்மையை உணர்ந்து கொள்வதற்கும், அதனை உளமார ஏற்பதற்கும் எந்தத் தயக்கத்தையும் தாயகத்திலுள்ள தமிழ் மக்கள் கொண்டிருக்கவில்லை.

ஏனெனில், தலைவர் பிரபாகரன் இறுதி மோதல் களத்திலிருந்து தப்பி ஓடி, வெளிநாடுகளில் மறைந்து வாழ்ந்திருந்தால், அவர் சாதாரண ஒருவராகவே இன்றைய கட்டத்தில் நோக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். ஏனெனில், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் அதியுச்ச வெற்றிகளை ஈட்டியது பிரபாகரனின் காலத்திலாகும். அவர், தமிழ் ஈழத்துக்கான போராட்டத்தில் தன்னுடைய உடல், பொருள், ஆவி என்று அனைத்தையும் முன்வைத்துத்தான் நின்றார். அவரின் முன்னெடுப்பின் அர்ப்பணிப்பின் மீதான நம்பிக்கையினால் தான், ஆயிரக்கணக்கான இளையோர் தங்களை ஆகுதியாக்கியிருக்கிறார்கள். எவ்வளவு நெருக்கடிகள் ஏற்பட்டாலும், “தலைவர் – அண்ணா” போராட்டத்தை விட்டுக் கொடுக்க மாட்டார் என்பது, அவரின் தலைமையில் பயணித்தவர்களின் ஒரே நம்பிக்கையாக இருந்தது. அப்படியான நம்பிக்கையை விதைத்து, புலிகள் இயக்கத்தை தமிழ் மக்களின் தலைமைப் போராட்ட அமைப்பாகக் கட்டியமைத்த தலைவர், தமிழ் மக்களை நிர்க்கதியாக்கிவிட்டு தப்பி ஓடியிருப்பார் என்று நம்புவதற்கு தாயகத்து மக்கள் ஒருபோதும் தயாராக இருக்கவில்லை. அதனால்தான், தலைவர் பிரபாகரன் மீதான விமர்சனங்கள் (குறிப்பாக இறுதி மோதல் காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் தொடர்பில் கோபமும் ஆற்றாமையும்) இருந்தாலும், அவரை மக்கள் இன்னமும் தமிழ்த் தேசியத் தலைவராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு போராட்டத்தினை சிதைக்க வேண்டும் என்றால், அந்தப் போராட்டத்தின் தலைமையை அகற்ற வேண்டும் என்பது அரசியல் – போரியல் விதிகளின் முதன்மையானது. அதனால்தான், போராட்டத்தைக் காக்க வேண்டுமென்றால், தலைமையைக் காப்பாற்றியாக வேண்டும் என்பது அடிப்படை விதி. தலைவர் பிரபாகரனை, அழித்தொழிப்பதற்கான பல நூறு முயற்சிகளை இலங்கையும், இந்தியாவும், சகோதர இயக்கங்களும் மேற்கொண்டிருக்கின்றன. அதன் பெயரில், அவர் கொல்லப்பட்டுவிட்டார் என்று பல தடவைகள் ஊடகங்களில் அறிவிக்கப்பட்டும் இருக்கின்றன. ஆனால், அவர் புலிகள் இயக்கத்தை தமிழ் மக்களின் தலைமை அரசியல் விடுதலை இயக்கமாக கட்டியமைத்தார். கிட்டத்தட்ட மூன்று தசாப்த காலம் வழிநடத்தியும் இருக்கிறார். புலிகள் இயக்கமும், தமிழ் மக்களும் தலைவரைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை முழுமையாக ஏற்றுத்தான் கடந்த காலங்களில் செயற்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், அவர் இழக்கப்பட்டால் புலிகள் இயக்கம் வலுவிழக்கும் என்பது தெளிவாகத் தெரிந்த ஒன்று. அப்படியான தருணத்தில், அவரின் வெற்றிடம் தொடர்பில் யாரும் சிந்திக்கக் கூட தயாராக இருக்கவில்லை. ஏன், தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு காலத்தில் தலைவர் பிரபாரனை தங்களின் எதிரிகளாகக் கருதியவர்களே கூட, அவரின் இல்லாமையை விரும்பியிருக்கவில்லை. ஆனால், முள்ளிவாய்க்கால் இறுதி மோதல்கள் என்பது, தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் முடிவாக அமைந்தது. புலிகள் இயக்கமே, போராட்டத்தின் இறுதி வரை நின்று பொருதிவிட்டு “நாங்கள் ஆயுதங்களை மௌனிக்கின்றோம்“ என்று அறிவித்திருந்தார்கள். குறிப்பாக, கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை,” ..ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கணங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன..“ என்று தெரிவித்த ஒலிப்பதிவுகள் ஏற்கனவே வெளியாகியிருக்கின்றன. அத்தோடு, இறுதி மோதல்களம் என்பது இலங்கை அரச படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான ஒன்றாக நிகழவேயில்லை. அது, தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்கான யுத்தமாகவும் ராஜபக்ஷக்கள் வடிவமைத்து நடத்தி முடித்திருந்தார்கள். அப்படியான கட்டத்தில், போராட்டக்களத்தில் மக்களும் புலிகளும் வேறு வேறு களங்களில் இருக்கவில்லை. நகமும் சதையுமாக ஒரே இடத்தில் நின்றார்கள். அதன் உண்மையும் பொய்யும் மக்களுக்கும் தெரியும். அதனை இறுதி மோதல்கள் முடிவுக்கு வந்து பதினாறு வருடங்கள் கழித்து, புலம்பெயர் நாடுகளில்

தொடர்ச்சி▼



# தலைவர் பிரபாகரனின் பெயரை முன்வைத்து நடக்கும் நாடகங்கள்!

தொடர்ச்சி▲

நடத்தப்படும் சதி நாடகங்களைப் பார்த்துத்தான் அறிந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் கிடையாது. அப்படியாக மக்களின் தலையில் மிளகாய் அரைக்கலாம் என்று யாராவது நம்பினால், அவர்களைக் குறித்து வருந்தத்தான் முடியும்.

தலைவர் பிரபாகரனின் வீரச்சாவை, இவ்வளவு காலமும் ஏற்றுக்கொள்ளாமல், தமிழ்த் தேசிய அரசியல் போராட்டக்களத்தில் சூனிய வெளியைப் பேண முயன்றவர்கள் தொடர்பில், சந்தேகம் கொள்ள வேண்டுமே தவிர, அவர்களையும் அவர்களின் நிகழ்ச்சி நிரலையும் யாரும் அங்கீகரித்துச் செயற்பட முடியாது. "...தலைவர் சாகவில்லை, உயிரோடு இருக்கிறார். தக்க தருணத்தில் அவர் தன்னை வெளிப்படுத்துவார்..." என்று புலம்பெயர் தேசங்களில் கதையளந்தவர்களின் அநேகர், புலிகளின் சொத்துக்களின் பினாமிகளாக இருந்தவர்கள். அவர்களிடம் பில்லியன் டொலர்கள் கணக்கில் புலிகளின் சொத்துக்கள் இருக்கின்றன. "தலைவர் இருக்கிறார், அவர் வரும்போது அவரிடம் சொத்துக்களை கையளிப்போம்.." என்று கூறுவதன் மூலம், அந்தச் சொத்துக்களை சுருட்டிக் கொள்ளலாம் என்பதுதான் ஒற்றை எண்ணம். கடந்த பதினாறு ஆண்டு காலமாக இப்படியான தரப்புக்கள் இலங்கை – இந்திய புலனாய்வு தரப்புக்களோடு மிக நெருக்கமாகவும் இயங்குகின்றன. அவர்களே, தலைவர் இருக்கிறார், விரைவில் வெளிப்படுவார் என்று அடிக்கடி அறிவிப்பதும், துவாரகா வெளிப்படப்போகிறார் என்று அறிவித்து அசிங்க நாடகங்களையும் அரங்கேற்றுகின்றார்கள். இவர்களிடம் காணப்படும் புலிகளின் பெரும் மதிப்பு தலைவரின் வீரச்சாவு அறிவித்தலை கையில் எடுத்திருக்கின்றது என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இல்லையென்றால், இந்தத் தரப்பினர் ஏன் இப்போது வெளிப்பட வேண்டும், அதுவும் ஒகஸ்ட் மாதத்தில் தலைவரின் வீரச்சாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏன் முயற்சிக்க வேண்டும்?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளாக மே 18, அனுஷ்டிக்கப்படுகின்றது. அன்றைய நாளில்தான் தலைவரும் வீரச்சாவடைந்தார் என்பது தாயகத்து மக்களின் நிலைப்பாடு. இலங்கை இராணுவம் போர் வெற்றி நாளாக மே 19ஐ முன்னெடுக்கின்றது. ஆனால், தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மே 18க்குள் வைத்துக் கொள்வதற்கு போராட்ட மௌனிப்பு, தமிழ் மக்களின் பேரிழப்புக்கான கனதி நாள், அத்தோடு தலைவரின் வீரச்சாவு என்பவை எல்லாமும் காரணமாக இருக்கின்றன. அந்த உணர்வு தமிழ் மக்களிடம் உண்டு. அவற்றின் மீது தேவையற்ற சந்தேகங்களை ஏற்படுத்தி, குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கமும் தலைவருக்கு அஞ்சலி என்று இப்போது புறப்பட்ட தரப்புக்கள் கொண்டிருக்கின்றன என்றே கொள்ள வேண்டியிருக்கின்றது. பெரும் வீரமும் தீராத அர்ப்பணிப்பும் கொண்ட புலிகளின் ஆயுதப் போராட்டத்தின் இறுதி நாள்கள் குறித்து, பொய்யான கட்டுக்கதைகளை புனைந்து, அவற்றின் மீது எந்த விடயங்களையும்



கட்டமைக்கவே முடியாது. அப்படிக் கட்டமைக்க யார் முயன்றாலும், அவர்கள்தான் முதலில் அம்பலப்படுத்த வேண்டிய தரப்பினராகும். ஏனெனில், அவர்கள் எதிரிகளைக் காட்டிலும் ஆபத்தானவர்கள். சொந்த மக்களையே தொடர்ந்தும் நட்டாற்றில் வைத்துக் கொண்டிருக்க முயல்பவர்கள்.

தொடர்ச்சி▼



# தலைவர் பிரபாகரனின் பெயரை முன்வைத்து நடக்கும் நாடகங்கள்!

தொடர்ச்சி▲

புலம்பெயர் தேசங்களில் இருக்கும் ஒரு தொகுதி மக்களுக்கு ஆயுதப் போராட்டத்தின் முடிவு, இன்னமும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கின்றது. அது, தாயகத்தை விட்டு தூர இருப்பதினால் ஏற்பட்டது என்றும் கொள்ளலாம். ஏனெனில், அவர்களுக்கும் தாயகத்துக்குமான தொடர்பாக அந்தப் போராட்டம் இருந்தது. ஆனால், ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தமையினால், அவர்களிடம் தங்களின் வகிபாகம் தொடர்பில் கேள்வி எழுந்திருக்கின்றது. அதனால்தான், இறுதிப் போராட்டம், தலைவர் தொடர்பிலான கட்டுக்கதைகளின் பின்னால், செல்லத் தலைப்படுகிறார்கள். அவர்கள், அதனை தாயகத்துக்குள் எப்படியாவது விதைத்துவிட வேண்டும் என்கிற மனநிலையோடு செயற்படுகிறார்கள். அவர்களை நோக்கிச் சொல்லிக் கொள்ள இருப்பது ஒன்றே ஒன்றுதான். நீங்கள் கனவுலகில் பயணிப்பது உங்களின் உரிமை. ஆனால், அவ்வாறான கனவுலகில் தாயகத்து மக்களும் பயணிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவது, அபத்தமான சிந்தனை. அது, ஒரு கட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் செய்யும் துரோகமாகும். ஆக, இப்படியான சதி – புனைவுக் கதைகளை தாயகத்தை நோக்கி கொண்டு வராதீர்கள். தலைவரை, அவரின் அர்ப்பணிப்போடு ஏற்றுக்கொண்டு தாயகத்து மக்கள் அவரை நெஞ்சிலேற்றி தங்களின் அடுத்த கட்டப் பயணத்துக்கான முயற்சிகளில் இருக்கிறார்கள். அது தொடர்பில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் தேவையில்லை.

# தம்பலகாமத்தில் நள்ளிரவில் வீடு எரிந்து தீக்கிரையானது!





(எஸ்.கீதபொன்கலன்)

தம்பலகாமம் நடுப்பிரப்பந்திடலில் வெள்ளி நள்ளிரவு 12 மணியளவில் வீடு ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

வெளிநாட்டுக்கு சென்று இலங்கை திரும்பியவரை அழைத்துவருவதற்காக குடும்பத்தவர்கள் அனைவரும் கொழும்பு சென்ற வேளை இரவு 12 மணியளவில் வீடு தீப்பிடித்திருந்திருக்கின்றது



காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதிகளவான பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன. உயிர் சேதம் எதுவும் இல்லை. மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# பேராசிரியர்களாக மூவருக்குப் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜுலை 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் ஏக காலத்தில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மருத்துவ பீடத்தின் ஓட்டுண்ணியல் துறை, சத்திரசிகிச்சையியல் துறை மற்றும் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூன்று பேரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக் கழகப் பேரவை நேற்று சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.


பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று 26 ஆம் திகதி, சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய, திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த ஓட்டுண்ணியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.முருகானந்தன், சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எஸ். குமரன் மற்றும் சத்திரசிகிச்சையியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கோபிசங்கர் ஆகியாரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் என்பன நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்ஆடிப்படையில், கலாநிதி ஏ. முருகானந்தன் ஓட்டுண்ணியலில் பேராசிரியராகவும், கலாநிதி எஸ். குமரன் குடும்ப மருத்துவத்தில் பேராசிரியராகவும், கலாநிதி எஸ்.கோபிசங்கர் சத்திரசிகிச்சையியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.








# மதுபோதையில் 20 பேர் கொண்ட குழு அடாவடி மெரிஞ்சிமுனை நாரயம்பதி மாதா சுரூவம் தகர்ப்பு

## தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் உட்பட 8 பேர் கைது!

மெரிஞ்சிமுனை நாரயம்பதி மாதா கோயிலின்மகிமைமிக்கமாதாசுரூவத்தை மதுபோதையில் உடைத்து சேதப்படுத்திய சந்தேகத்தின் பேரில் வேலணையை சேர்ந்த 8 பேர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் உள்ளடங்கலாக 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் தகவல் தருகையில் –

மெரிஞ்சிமுனை நாரயம்பதி மாதா கோயிலின் மாதா சுரூவத்தை மதுபோதையில் இருந்த 20 பேரடங்கிய கும்பல் ஒன்று உடைத்து சேதப்படுத்தியதாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்தனர். பொலிஸார் துரித நடவடிக்கையில் இறங்கியதன் அடிப்படையில் 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களின் தகவலின் அடிப்படையில் ஏனையோர் தேடப்பட்டு வருகின்றனர். அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர். – எனத் தெரிவித்தனர்.

அத்துடன் விசாரணைகளை அடுத்து இந்த நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸர் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் உள்ளடங்கலாக 20 பேர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் இந்த ஆலயத்தின் பகுதியில் இருந்து மது அருந்தினர் எனவும், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சுற்றுலாவுக்காக வருகை தந்த சுற்றுலா பயணிகளுடன் தகாத வார்த்தைகளால் நக்கல் கதைகள் கூறி முரண்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில் கடும் மதுபோதையில் இருந்த குறித்த குழுவினர், இந்தியாவில் இருந்து கொண்டு–வரப்பட்ட – சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான – மாதா சுரூவத்தை அடித்து முழுமையாக உடைத்துச் சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தனர். கிறிஸ்தவ ஆலயத்தின் சுரூவத்தை இந்து சமயத்தைச் சேர்ந்த தரப்பினர் உடைத்தனர் எனக் குற்றச்சாட்டு எழுந்த நிலையில், பொலிஸார் நிலைமையைக் கருத்தில் கொண்டு துரித நடவடிக்கையில் ஈடுபட்டதன் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் உட்பட 8 பேர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.














# கொக்கிளாய்க் கடலில் தொழிலிற்குச் சென்ற இளைஞனக் காணோம்;தேடுதல் பணி தீவிரம்

(பா.சதீசன்)

கொக்கிளாய் கடலிற்கு தொழிலிற்கு சென்ற இளைஞன் கடலில் மாயமாகிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாய் கடலிற்கு நேற்றுமுன்தினம்அதிகாலை4.30மணியளவில் கடற்தொழிலுக்கு 5 பேர் சென்ற நிலையில் ஒருவர் மாயமாகியுள்ளார். தொழிலுக்கு போய் கடலில் இறங்கியவருக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் தற்போது வரை கிராம மக்கள் மற்றும் கடற்தொழிலாளர்கள் இணைந்து தேடிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்தச் சம்பவத்தில் கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் இருந்து தொழிலினை மேற்கொண்டுவரும் பொன்னம் பெருமகே ஜெகான் நதி அருண் என்னும் 23 வயது இளைஞனே மாயமாகியுள்ளார்.

இந்த இளைஞன் தொடர்பாக கொக்கிளாய்ப் பொலிஸ் நிலையத்தில் நேற்றையதினம் முறைப்பாடு பதிவு செய்தும் இதுவரை அந்த இடத்திற்குப் பொலிஸார் வருகை தரவில்லை என்று காணாமல் போன இளைஞனின் தந்தை தெரிவித்துள்ளார்.

காணாமல் போன இளைஞனின் படம் வீட்டில் வைக்கப்பட்டு பிரார்த்திக்கப்பட்டு வருவது குறிப்பிடதக்கது.























# தமிழ்த் தேசிய வீரர்கள் தின நிகழ்வு நேற்று யாழ். நகரில்

1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கியஸ்தர்களின் 42 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து நடராசா தங்கவேல்(தங்கத்துரை), செல்வராசா யோகச்சந்திரன்(குட்டிமணி), கணேசானந்தன் ஜெகநாதன் (ஜெகன்), செல்லத்துரை சிவசுப்பிரமணியம் (தேவன்) ஆகியோரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன், சமத்தவக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், யாழ். மாநகர சபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி▼

















# தமிழ்த் தேசிய வீரர்கள் தின நிகழ்வு நேற்று யாழ். நகரில்



# பாலியல் நோய்களால் நேரக் கூடிய பின்விளைவுகளை நேரத்துடன் சிகிச்சை பெறுவதன் மூலம் தடுக்கலாம்!

## பொதுச்சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் விளக்கம்

(த.சுபேசன்)

பாலியல் நோய்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு, சிகிச்சை பெறுவதன் ஊடாக

கருவளக் குறைபாடு வராமல் தடுக்க முடியும் எனப் பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

வளரிளம் பருவ மாணவர்களுக்கான பாலியல் நோய்கள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தமர்வொன்று அண்மையில் கிளி. முக்கொம்பன் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றபோதே அவர் அங்கு மேற்பட. கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

பாலியல் உறவின்போது தொற்றுள்ளவரின் பாலியல் திவங்களினூடாக கடத்தப்பட்டு ஆரோக்கியமானவருக்கு பரவக்கூடிய நோய்களே பாலியல் நோய்களாகும்.

இவற்றில் கிளமிடியா, கொனேரியா போன்றவை பெண்களின் கருப்பை,–பலோப்பியன் குழாய்களைப் பாதித்தும், ஆண்களின் விந்து வளத்தைக் குறைத்தும் கருவளக் குறைபாட்டை ஏற்படுத்தக் கூடியன.

எனவே இவற்றுக்காக ஆரம்பத்திலேயே சரியான சிகிச்சையைப் பெற்றால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள கருவளக் குறைபாட்டை தவிர்க்கலாம்.

பதினைந்து முதல் இருபத்தொன்பது வயதானவர்கள் அதிகளவில் பாலியல் சார்ந்த தொற்று நோய்களுக்கு உள்ளாகின்றனர் என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது. எனவே மாணவப் பருவத்தில் பாலியல் கல்வி பற்றிய தெளிவான அறிவும் தொற்று பரவுவதைத் தடுக்கும் வழிமுறைகளையும் சரியான வழிகளினூடாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு ஒருவர் எனும் நம்பிக்கைக்குரிய திருமண உறவு ஏற்படும் வரை பாலியல் உறவைத் தவிர்த்தல், பாலியல் உறுப்புகளை எப்போதும் சுத்தமாகப் பேணுதல், பாதுகாப்பான பாலியல் உறவைக் கைக்கொள்ளுதல், பாலியல் நோய்களுக்கு ஆரம்பத்திலேயே தகுந்த வைத்தியரை நாடி சிகிச்சை பெறுதல் என்பன ஆரோக்கியமான வாழ்வுக்கு முக்கியமானவை யாகும்.



எச்.ஐ.வி. தொற்று உட்பட பாலியல் சார்ந்த நோய்களுக்கான நம்பகமானதும், இரகசியம் காக்கக்கூடியதும் இலவசமானதுமான சிகிச்சைகள் அரச வைத்தியசாலைகளின் பாலியல் நோய்த்தடுப்பு சிகிச்சைப் பிரிவில் நேரடியாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் பாலியல் தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்கவும் பாதுகாப்பு உதவிகளைப் பெறவும் சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் போன்றோரை உங்கள் கிராமங்களிலேயே தொடர்பு கொள்ள முடியும். – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# செல்வி தர்மலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு



நீண்ட காலம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் விளையாட்டுப் பொறுப்பாசிரியையாகவும் ஆங்கில ஆசிரிய்சியாகவும் பணியாற்றி அண்மையில் காலமான செல்வி சரோஜினிதேவி தர்மலிங்கம் ("தர்மலிங்கம் மிஸ்") அவர்களுடைய வாழ்வைப் போற்றும் நினைவேந்தல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3:30 மணி முதல் 5 மணி வரை யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் உள்ள றிம்மர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

வேம்படி பழைய மாணவிகளால் நடத்தப்படும் இந்த நிகழ்வில் செல்வி தர்மலிங்கத்தின் வாழ்வு குறித்த ஆவணப்படம் ஒன்றும் வெளியிடப்பட இருக்கின்றது.





# மயிலிட்டி பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மகோற்சவம்

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மகோற்சவத்தின் எட்டாம் நாள் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெகு சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது.

பகல் பூசை வழிபாடுகளை தொடர்ந்து மாலை உற்சவத்தை முன்னிட்டு மாலை 5.00 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்று குதிரை வாகனத்தில் எழுந்தருளிய பேச்சி அம்மன் திருப்பூர் கடற்கரை திடலில் வேட்டையாடி சங்கரியார் வளவு வீதி ஊடாக பயணித்து பிரதான வீதி வழியே ஆவளை சந்தியை சென்றடைந்தது. அங்கிருந்து மறுபடியும் பிரதான வீதி வழியாக பயணித்து திருப்பூர் வீதியூடாக இரவு 8.30 மணியளவில் ஆலயத்தை வந்தடைந்தது.

தொடர்ந்து பிராயச்சித்த அபிசேகம் இடம்பெற்று வசந்தமண்டப பூசையுடன் உள்வீதி உலா வந்து சிம்ம வாகனத்தில் எழுந்தருளி வெளிவீதி உலா இடம்பெற்றது. வேட்டை வீதி உலாவின் போது மக்கள் மண்டப படிகள் வைத்து பேச்சி அம்பாளை வரவேற்று வழிபட்டிருந்தனர்.







# உடுப்புத் துவைத்துக்கொண்டு இருந்தபோது மயங்கி விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

உடுப்புத் துவைத்துக்கொண்டு இருந்தபோது மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சுப்ரமணியம் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த சிவஞானம் சிவகுமார் (வயது 58) என்பவராவார்.

மேற்படி நபர் தாவடியில் உள்ள பாடசாலை ஒன்றில் காவலாளியாக கடமை ஆற்றுவதாகவும் நேற்று சனிக்கிழமை மதியம் 1:30 மணியளவில் உடுப்பு துவைத்துக் கொண்டிருந்த போது மயங்கி விழுந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது ஏற்கனவே அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மரணம்தொடர்பில்யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரதேச பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.



# பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி அலுவலகத்தைப் பார்வையிட்டனர்

ஜனாதிபதி அலுவலகத்தைப் பார்வையிட பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் பிற்பகல் வருகை தந்தது.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுடன் சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி அலுவலக நூலகம், பழைய நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவை கூட்ட மண்டபம் உள்ளிட்ட பழைய இடங்களைப் பார்வையிடும் வாய்ப்பு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைத்தது.

ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஆண்ட்ரூ பெட்ரிக் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.









# இனிய பாரதியின் வீடு சோதனை



கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட கொலைகள், ஆட்கடத்தல்கள், உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட, இனிய பாரதி என்றழைக்கப்படும் கே.புஸ்பகுமாரின் வீடு மற்றும் அலுவலகம் என்பன நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆறாம் திகதி அவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், நேற்று, அவர் பயன்படுத்திய அலுவலகங்கள் மற்றும் முகாம்கள் என்பன, பயங்கரவாத புலனாய்வு பிரிவு மற்றும் குற்றப் பலனாய்வுப் பிரிவினாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, குற்றப் புலனாய்வு பிரிவினரினால் முன்னதாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிந்த சந்தேகநபர்கள் இருவரும் மேற்படி இடத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அவர்கள் வழங்கிய தகவலுக்கமையவே, இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



# மடகஸ்காரில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களுக்கு விளக்கமறியல்

மடகஸ்கார் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட 8 இலங்கை மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ரூட் பாபா 06 எனும் நீண்டநாள் மீன்பிடி படகு 8 மீனவர்களுடன் கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி வென்னப்புவயிலிருந்து புறப்பட்டது.

கடல் எல்லைகளை மீறியதற்காக கடந்த மாதம் 2 ஆம் திகதி அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை உடனடியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்தது.




# மாலைதீவு நாட்டவர்களுக்கு இலங்கையில் ஓராண்டு விசா

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் மாலைத்தீவை சேர்ந்தவர்களுக்கு 1 வருட விசாவை அரசாங்கம் வழங்கும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.


கொழும்பில் இடம்பெற்ற சுற்றுலா தொடர்பான கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை இதுவரை மாலைத்தீவு மக்களுக்குக் குறுகிய கால விசாவை மட்டுமே வழங்கி வந்தாலும், புதிய நீண்ட கால விசா ஒரு வருடம் வரை தங்க அனுமதிக்கும் என்று விஜித ஹேரத் இதன் போது தெரிவித்தார்.

அத்துடன் மாலைத்தீவு மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக இலங்கைக்குப் பயணம் செய்து வருகின்றனர், ஆனால் சமீபத்திய விசா கட்டுப்பாடுகள் இதற்கு இடையூறாக உள்ளன என்றும் அமைச்சர் விஜித ஹேரத் கூறினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் நாளை மாலைத்தீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது புதிய விசா கொள்கை முறையாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# 5 நாடுகளின் தூதுவர்களை சந்தித்தார் பிரதமர் ஹறிணி

பூட்டான், கசக்ஸ்தான், ஜோர்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் எரித்திரியா ஆகிய நாடுகளின் தூதர்களுக்கும் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய விற்கும் இடையே சந்திப்பு இடம்பெற் றுள்ளது.

பிராந்திய மற்றும் சர்வதேச பங்காளி களுடன் இருதரப்பு மற்றும் பல தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்து வதற்கான அரசாங்கத்தின் உறுதிப் பாட்டை இந்த சந்திப்பு பிரதிபலிப் பதாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்தது.

நாடுகளுக்கு இடையிலான பரஸ் பர நலன்கள், நிர்வாகம், இலங்கை யின் வளர்ச்சி மற்றும் ஜனநாயக மாற் றத்திற்கான ஆதரவு குறித்து இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

ஆடை உற்பத்தி, கல்வி, கலாசார பரி மாற்றம், ஏற்றுமதி, சுகாதாரம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகள் தொடர்பி லும் இந்த சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டதாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.











# பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளராக பிரிகேடியர் பிரேங்க்ளின் ஜோசப் நியமனம்

பாதுகாப்பு அமைச்சின் புதிய ஊடக பணிப்பாளராகவும் ஊடகப் பேச்சாளராக வும் பிரிகேடியர் பிரேங்க்ளின் ஜோசப் நிய மிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவியை வகித்த கேர்னல் நலின் ஹேரத் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பிராங்க்ளின் ஜோசப் கடமைகளைப் பொறுப்பேற்றார் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவப் பொறியியலா ளர் படையணி அதிகாரியான இவர் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அர்ப் பணிப்பணிப்புடன் செயற்பட்ட அதிகாரி யாவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# 1000 தேசிய பாடசாலைகள் வேலைத்திட்ட அறிக்கையைக் கோரியது கோபா குழு

1000 தேசிய பாடசாலைகள் வேலைத் திட்டம் மற்றும் இராஜாங்க அமைச்சின் 72 திட்டங்கள் குறித்து கோபா குழுவி னால் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 3 மாதங்களுக்குள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோபா குழு பரிந்துரைத்துள்ளதாக நாடாளு மன்ற தகவல் தொடர்பாடல் துறை தெரி வித்தது.

2023 ஆம் ஆண்டுக்கான கணக் காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தற்போதைய செயற்திறன் குறித்து கோபா குழுவில் அண்மை யில் ஆராயப்பட்ட போதே இந்த விட யம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தினால் செயற் படுத்தப்பட்ட 1000 தேசியப்பாடசாலை கள் வேலைத்திட்டம் வெற்றியளிக்க வில்லை என்பது தெரியவந்துள்ள தாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் 23 பாடசாலைகள் மாத்திரமே தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன், 809 மாகாண பாடசாலைகளை தேசிய பாட சாலைகளாக தரமுயர்த்தி பெயர்ப்பலகை களை தயாரிப்பதற்கு 2.42 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சின் கீழ் ஆரம் பிக்கப்பட்ட 72 திட்டங்கள் குறித்து 3 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப் பிக்க வேண்டுமெனவும் பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

# அமெரிக்க தீர்வை வரி தொடர்பில் அடுத்த வாரம் கலந்துரையாடல்

தீர்வை வரி குறைப்பு தொடர்பான மற்றொரு கலந்துரையாடல் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலக அதிகாரிகளுக்கு இடையே இந்த கலந்து ரையாடல் இணைய வசதி ஊடாக நடை பெறவுள்ளது.

ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் கலந்துரையாடல்களில் முன்னேற்றம் ஏற்படும் என இலங்கை பிரதிநிதிகள்




குழு தெரிவித்தது.


வரிக்குறைப்பு தொடர்பாக ஜனாதி பதிக்கும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் தூதுவருக்கும் இடையே இணைய வசதி ஊடாக நேற்று முன் தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஒகஸ்ட்முதலாம்திகதிமுதல்அமுலுக்கு வரும் வகையில் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்க ளுக்கு 30 வீத தீர்வை வரியை அமெ ரிக்கா அறிவித்தது.

இந்த வரி விகிதத்தை மேலும் குறைக்க அரசாங்கம், அமெரிக்காவுடன் தொடர்ச்சி யான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# என்றுமே கவிமணி வாழ்கிறார் கவிகளில்!

## இன்று கவிமணியின் பிறந்தநாள்



கவிமணி எங்கள் தமிழ் மணி
கனிவாய் தமிழில் கவி தந்தார்
புவியைப் புனிதமாய் அவர் கண்டார்
புத்தரை இத்தரை போற்றிட வைத்தார்

எளிமையாய் கவிதை ஈந்தார் கவிமணி
இயல்பாய் சொற்கள் இணைந்தன அவரிடம்
புவியை எண்ணியே புகன்றார் கவிதையை
அறிவுரை ஆகியே அனைத்துமே அமைந்தது

செந்தமிழ் ஆங்கிலம் சிறப்புடன் கற்றார்
சிறந்திடு படைப்புகள் செப்பமாய் அளித்தார்
நந்தமிழ் போற்றிடும் நற்றமிழ் கவியாய்
நாநிலம் மெச்சிட வாழ்ந்தனர் கவிமணி

ஆசிய ஜோதியாய் ஆக்கினார் புத்தரை
அவரின் பாதையை அருமையாய்க் காட்டினார்
அவலம் காட்டினார் அறிவுரை பகர்ந்தார்
சிகரம் ஆகவே தீட்டினார் கவிமணி

பக்தியைப் பாடினார் பரமனைப் பாடினார்
சத்தியம் நேர்மையைச் சமத்துவம் பாடினார்
இத்தரை குழந்தைக்கு ஏற்பன பாடினார்
எளிமையாய் இனிமையாய் கவிமணி பாடினார்

கவிமணி கவிதைகள் கரும்பாய் இனித்தன
இரும்பாம் இதயத்தை இளகிடச் செய்தன
உருக்கமும் இருந்தது இரக்கமும் இருந்தது
உயிர்ப்புடன் தமிழும் ஓங்கியே எழுந்தது

மலரும் மாலையும் கவிமணி சூட்டினார்
மாநிலம் பயனுற கவிதைகள் யாத்தனர்
ஓடும் உதிரத்தில் ஒழுகிடும் கண்ணீரில்
உயர்ஞான தத்துவத்தை உரைத்தனர் கவிமணி

தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசுவென்று
சுவையுடன் கவிமணி சொல்லிய பாடலை
கேட்டவர் மகிழ்வர் கிளுகிளுப் படைவர்
குழந்தைகள் யாவரும் துள்ளியே குதிப்பார்

அன்பைப் பாடுவார் அன்புடன் பாடுவார்
ஆரையும் நொந்திட பாடிடார் கவிமணி
ஆறுதல் தருவதாய் அவருமே பாடுவார்
ஆதாலால் கவிமணி வாழ்கிறார் கவிகளில்

வசையைப் பாடா வளத்தைப் பாடினார்
வாழ்த்தியே பாடினார் வரம்பைக் காட்டினார்
எளிமையாய் பாடினார் ஏற்றதைப் பாடினார்
என்றுமே கவிமணி வாழ்கிறார் கவிகளில்!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.



# முள்ளிவாய்க்கால் மட்டுமல்ல இனப்படுகொலையின் சாட்சியாக செம்மணி மனிதப் புதைகுழியும்...!



கந்தசாமி
தசரூபன்

இலங்கைத் தீவில் இடம்பெற்ற முப்பது வருட யுத்தம் காரணமாக முழு நாடும் பொருளாதார ரீதியாக பாதிக்கப் பட்டுள்ளது. சொத்தழிவுகள், உயிரிழப் புக்கள், காணாமல் போதல்கள் என்பன இடம்பெற்றுள்ளன. இனங்களுக்கு இடை யில் ஒருவர் தோளில் ஒருவர் கைகோர்த்து சமத்துவமாக வாழும் நிலையை உரு வாக்க முடியாதுள்ளது.

யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்தும் நாட்டில் உண்மையான இன நல்லிணக்கத்தையும், மத ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியாமல் உள்ளது. அதற்கு தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களே காரணம் என்பதையும் மறுப்பதற்கில்லை.

தமிழ் மக்களின் காணி அபகரிப்பு, காணா மல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல் கைதி களின் விடுதலை போன்ற விடயங்களிலாவது குறைந்த பட்சச் செயற்பாடுகளைக் கூட ஆட்சியாளர்கள் முழு மனதுடன் செய்யவில்லை. இதன் காரணமாகப் போரின் வடுக்களுடன் நீதிக்காக ஏங்கும் ஒரு தேசிய இனமாகத் தமிழர் தேசம் மாறியிருக்கின்றது.

இந்த நிலையில் யுத்த காலத்தின் போது முப்படைகள், பொலிஸார் மற்றும் புலனாய்வுத் துறையினரால் சந்தேகத்தின் பேரிலும், சுற்றி வளைப்புக்களின் போதும் கைது செய்யப்பட்டவர்களும், இறுதி யுத்தத்தின் போது அரசினதும், இராணுவத் தினதும் அறிவிப்புக்கு அமைய பலர் முன்னி லையில் ஒப்படைக்கப்பட்டோருக்கும் என்ன நடந்தது என்று நீதி கோரி மக்கள் 3000 நாள்களுக்கு மேலா கப் போராடி வரும் நிலையில் தமிழர் தாயகப் பிர தேசங்களில் புதிதாக வெளிவரும் மனித எச்சங்கள் மக்கள் மத்தியில் அச்சத்தையும், குழப்பத்தை யும் ஏற்படுத்தியுள்ளன.

யுத்தம் முடிந்த பின்பு மன்னார் சதோச, முல் லைத்தீவுகொக்குத்தொடுவாய்,செம்மணிசித்து பாத்தி, சம்பூர் என்று பல இடங்களில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

அதில் தமிழ் இனத்தின் மீது திட்டமிட்டு படு கொலைபுரிந்தமைக்கானசான்றாகசெம்மணி, சித்துப்பாத்தி புதைகுழி மாறியிருக்கின்றது. அதற்குக் காரணம் அங்கு ஒன்றும் அறியாத பச்சிளம் குழந்தை முதல் முதியவர்வரை படு கொலை செய்து புதைக்கப்பட்டுள்ளமைக்கான தடயங்கள் வெளிவந்து அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளமையே. அப்பட்டமான போர் விதி மீறலை முள்ளி வாய்கால் மண் மட்டுமன்றிச் செம்மணிப் புதை குழியும் வெளிப்படுத்தியுள்ளது.

செம்மணி என்பது எவராலும் மறந்து விட முடியாத ஒரு இடம். ஒரு கறை படிந்த இடம் . 1998 ஆம் ஆண்டில், செம்மணியில் மனிதப் புதைகுழி இருப்பதாகப் படுகொலைகளுக்காக விசாரணை யில் இருந்த இலங்கை இராணுவ வீரர் ஒரு வரால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

1995, 1996 ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகளிடம் இருந்து அரச படையினரால் மீட்கப்பட்ட, யாழ்ப்பாண குடாநாட்டில் இருந்து காணாமல் போன நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டு செம்மணி கிராமத்துக்கு அருகில் உள்ள புதை குழிகளில் புதைக்கப்பட்டதாக அப்போது கூறப்பட்டது. அங்கு சுமார் 300 முதல் 400 உடல்கள் புதைக்கப்பட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

1998 ஜூலையில் இலங்கை இராணுவ வீரர் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, மாணவி கிருசாந்தி குமாரசாமியைக் கற்பழித்து படுகொலை செய்தமை மற்றும் அவரது குடும்பத்திரைப் படு கொலை செய்தமைக்காக மரண தண்டனையை எதிர்கொண்டார்.

குடாநாட்டில் இருந்து காணாமல் போனவர்களின்

தொடர்ச்சி ▼



# முள்ளிவாய்க்கால் மட்டுமல்ல இனப்படுகொலையின் சாட்சியாக செம்மணி மனிதப் புதைகுழியும்...!

தொடர்ச்சி▲

உடல்கள் அடங்கிய புதைகுழிகள் யாழ்ப்பாணத் தில் இருப்பதாகவும் அவர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். ராஜபக்ஷவும் அவரது இணைப் பிரதிவாதிகளும் இந்தக் கொலைகளுக்குப் பொறுப் பானதாகக் கூறப்படும் 20 பாதுகாப்புப் படை வீரர்களின் பெயர்களைக் கொடுத்தனர். ஆனால், முறையான ஆய்வுகளோ பக்கச்சார்பற்ற நீதியான விசாரணைகளோ இடம்பெறவில்லை. இதனையே செம்மணி, சித்துப்பாத்தி புதிய புதைகுழி வெளிப் படுத்தி நிற்கின்றது.

செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் வெள்ளிக்கிழமைவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வு களின் போது 90 வரையான எலும்புக் கூடுகள் மீட் கப்பட்டுள்ளன. இந்த என்புத் தொகுதிகளுடன் 'யுனிசெப்' நிறுவனத்தால் வழங்கப்படும் மாணவர் களுக்கான புத்தகப் பை, இரும்புகள் என்று நம்பப் படும் ஒரு தொகுதி கட்டிகள், பொம்மைகள், சிறுபேத்தல், காப்பு என்பன மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளில் சிறு குழந்தை களதும் அடக்குகின்றன.

ஆக, செம்மணி சித்துப்பாத்தி பகுதியில் சிறுவர் முதல் பெரியவர் வரை குடும்பம் குடும்ப மாக கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கு நீதியான விசா ரணை இடம்பெற வேண்டும். இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது யாழ். மாவட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த படைத் தளபதிகள் இதற்குப் பதில் அளிக்க வேண்டும். கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணைகள் போன்று செம்மணி, சித்துப்பாத்தி விசாரணையும் கிடப்பில் போடப்படாது. அது சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக விசாரணை செய்யப்பட வேண்டும். அதற்குப் பொறுப்பானவர்கள், துணை போனவர்கள் பாரபட்சமின்றித் தண்டிகப்பட வேண்டும். அதன் மூலமே பாதிக்கப்பட்ட தமிழ மக்களுக்கான பரிகார நீதியை பெற்றுக் கொடுக்க முடியும்.

கடந்த கால அரசுகளைப் போல் இல்லாது அநுர அரசு இந்த விடயத்தில் நீதியான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கி, நீதியை நிலை நாட்டுவதன் மூலமே தமிழ் மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள வடுக்களை நீக்க முடியும்.

இனப்படுகொலையின் சாட்சியாக இருக்கும் செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் புலம்பெயர் செயற்பாட்டாளர்களும் இராஜ தந்திர வட்டாரங்கள் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத் தத்தைக் கொடுக்க வேண்டும்.

ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் அந்த இடத்தைப் பார்வையிட்டு அஞ்சலி செலுத்தி சென்றிருந்தார். அவர் அங்கு அணையா விளக்கு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் மனங்களில் காணப்பட்ட வலிகளையும், நீதிக்கான ஏக்கத் தையும் புரிந்து கொண்டவராகவே சென்றார்.

ஆக, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி சர்வ தேசத்தினது கவனத்தையும் ஈர்த்துள்ளது. இருப்பினும் இதற்கு உண்மையான நீதி கிடைக்குமா என்பதே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மனங்களில் ஏற்பட் டுள்ள ஏக்கமாகும்.

# தேர்தல் களப்பணிகள் குறித்து தி.மு.க. நிர்வாகிகளுடன் அப்போலோவிலிருந்து முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை



ஓரணியில் தமிழ்நாடு மற்றும் தேர்தல் களப்பணிகள் குறித்து தி.மு.க. மண்டலப் பொறுப்பாளர்கள், நிர்வாகிகளுடன் அப்போலோ மருத்துவமனையில் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இது குறித்து தி.மு.க. வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் நேற்று அப்போலோ மருத்துவமனையில் தி.மு.க. மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளை அழைத்து ஆலோசனை நடத்தினார்.

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பில் அதிகமான மக்களை இணைத்து மாபெரும் வெற்றி அடைந்து வருவதற்கு காரணமான தி.மு.கவினருக்கு பாராட்டு தெரிவித்த முதல்வர் ஸ்டாலின், 150 தொகுதிகளில் 30 வீதம் உறுப்பினர் சேர்க்கை என்ற இலக்கை அடைந்ததுள்ளதையும் சுட்டிக்காட்டி பாராட்டினார்.

அதேசமயம், தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையில் பின் தங்கியுள்ள ஓரிரு மாவட்டங்கள், தொகுதிகளைக் குறிப்பிட்டு, அவற்றை மண்டலப் பொறுப்பாளர்கள் கவனித்துச் சரிசெய்யுமாறு அறிவுறுத்தினார். சில பாகங்களில் உறுப்பினர் சேர்க்கை விவரங்களில் சில குறைபாடுகள் இருப்பதை சுட்டிக்காட்டியவர், குறிப்பிட்ட வாக்குச்சாவடிகளில் மீண்டும் முதலில் இருந்து உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்.

வீடு வீடாகச் செல்லும்போது மக்களிடையே கிடைக்கும் வரவேற்பு, திராவிட மொடல் அரசின் திட்டங்கள் குறித்து மகிழ்ச்சியுடன் மக்கள் பேசுவது ஆகியவற்றை மண்டலப் பொறுப்பாளர்கள் விளக்கினர். இந்தக் கலந்துரையாடலில் முதல்வர் ஸ்டாலின், ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்துக்கு மக்களிடையே கிடைத்துள்ள வரவேற்பு குறித்தும் கேட்டறிந்தார்.”என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரசார ஸ்டிக்கர்களில் ஆனந்த் படத்தை நீக்கிவிட்டு விஜய் படம் மட்டும் இடம்பெற த.வெ.க. அறிவுறுத்தல்




த.வெ.க. பிரச்சார ஸ்டிக்கர்களில் புஸ்ஸி ஆனந்த் படத்தை நீக்கி விட்டு, விஜய் படம் மட்டும் இடம் பெற வேண்டுமென தலைமை அறிவுறுத்தியுள்ளதாக கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

கும்பகோணம் வட்டம் தாராசுரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தினர் வீடுதோறும் ‘மக்கள் விரும்பும் உங்கள் வேட்பாளர் விஜய்’ என அச்சிட்ட ஸ்டிக்கர்களை 300 இற்கும் மேற்பட்ட வீடுகளில் ஒட்டினர்.

இந்த ஸ்டிக்கரில் விஜய் படத்துடன், கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் படமும் இடம் பெற்று இருந்தது. இந்நிலையில், ஸ்டிக்கரில் ஆனந்த் படத்தை நீக்கி விட்டு, விஜய் படம் மட்டும் உள்ள புதிய ஸ்டிக்கரை அக்கட்சியினர் அச்சிட்டு, வீடுகளில் ஏற்கெனவே ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கருக்கு மேல் ஒட்டி வருகின்றனர்.

இது தொடர்பாக தவெக தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட இணைச் செயலாளர் பிரபாகர் தெரிவிக்கையில்,

“கும்பகோணத்தில் ஒட்டப்பட்ட ஸ்டிக்கரில் ஆனந்த் படத்தை அகற்றிவிட்டு, விஜய் படத்தை மட்டும் ஸ்டிக்கரில் அச்சிட்டு, புதிய ஸ்டிக்கரை ஒட்ட வேண்டும் என கட்சித் தலைமை, உத்தரவிட்டது. அதன்படி, புதிதாக விஜய் படத்தை மட்டும் ஸ்டிக்கரில் அச்சிட்டு, ஏற்கெனவே ஒட்டிய வீடுகளுக்குச் சென்று, புதிய ஸ்டிக்கரை ஒட்டி வருகிறோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவை தளமாக கொண்டு இயங்கும் ஆபாச செயலிகளுக்கு மத்திய அரசு தடை

இந்தியாவை தளமாக கொண்டு இயங்கும் 24 ஆபாச செயலிகளுக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்துள்ளது.

அந்த நாட்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ் மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது

ஆபாச செயலிகளை தடை செய்ய அனைத்து இணைய சேவை வழங்குநர்களுக்கும் மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.



# பலூசிஸ்தானில் தொடர் தாக்குதல்

## 23 பேர் பலி



பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் பலூசிஸ்தான் விடுதலை படை என்ற புரட்சி படையினர் நேற்று நடத்திய தொடர் தாக்குதல்களில், பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தாக்குதலில் இராணுவ கட்டமைப்புகளும் மற்றும் நுண்ணறிவு பிரிவுடன் தொடர்புடைய கட்டமைப்புகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் பலூச் தேசிய விடுதலையை அடையும் வரை ஆயுத போராட்டம் தொடரும் என்ற உறுதி மொழியை மீண்டும் உறுதி செய்துள்ளதாகப் புரட்சிப் படை வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செயற்கை நுண்ணறிவின் உலகளாவிய பாதுகாப்பில் கவனம் செலுத்தும் சீனா

செயற்கை நுண்ணறிவில் உலகளாவிய ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான அமைப்பொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில், சீன பிரதமர் லி கியாங் முன்மொழிவொன்றை அறிவித்துள்ளார்.

வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில், நாடுகளை ஒருங்கிணைக்க அவர் அழைப்பு விடுத்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சீனாவின் ஷங்காய் நகரில் வருடந்தோறும் நடைபெறும் உலக செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவுக்காக உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்பை உருவாக்க நாடுகளுக்கிடையே ஒருங்கிணைப்பைப் பேணுவதன் அவசியத்தையும் சீன பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.




சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே அதிகரித்து வரும் தொழில்நுட்ப போட்டியின் போது, செயற்கை நுண்ணறிவு ஒரு முக்கிய போர்க்களமாக உருவாகி வருகிறது.

தற்போது, ஒட்டுமொத்த உலகளாவிய செயற்கை நுண்ணறிவு நிர்வாகமும் வெவ்வேறாகப் பிரிந்து செயற்பட்டு வருகின்றன.

இதேவேளை, சுற்றுலா மற்றும் மேம்பாட்டிற்காக செயற்கை நுண்ணறிவை எற்றுக்கொள்வதில், இலங்கை, இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் நேபாளமும் இணைந்துள்ளது.

செயற்கை நுண்ணறிவின் விரிவாக்கத்தால், உலகம் வேகமாக மாறி வரும் நிலையில், இந்த மாற்றத்தை நேபாளம் ஏற்றுக்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஸ்கொட்லாந்தில் பாதுகாப்புடன் கோல்ஃப் விளையாடினார் ட்ரம்ப்

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனிப்பட்ட விஜயமாக ஸ்கொட்லாந்துக்கு சென்றுள்ளார்.

அங்கு அவர், தெற்கு அயர்ஷயரின் டர்ன்பெர்ரியில் உள்ள தமது சொகுசு கோல்ஃப் விடுதியில் தங்கியுள்ளார்.

தமது முதல் நாள் காலையில், டொனால்ட் ட்ரம்ப் தமது மகன் எரிக்குடன் கோல்ஃப் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார்.

அதன்போது, விடுதியை சுற்றி, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் அதனை அண்டிய வீதிகள் மூடப்பட்டிருந்தன.



மேற்படி பகுதிகளில் பொலிஸார் விசேட சோதனைகளையும் முன்னெடுத்திருந்தனர்.

நான்கு நாள்கள் ஸ்கொட்லாந்தில் தங்கியிருக்க திட்டமிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் வொஷிங்டனுக்குத் திரும்ப உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -27.07.2025




மற்றவர்களுடன் பழகும்பொழுது எப்படி பழகுகிறீர்கள் என்று கவனத்தில் கொண்டு பழகுங்கள்.பலன்கள் தாமதமாகக் கிடைக்கும்.பொறுமையுடன் இருந்தால் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறலாம்.

பணியைப் பொறுத்தவரை அதிக முயற்சி தேவை. இன்று பணியில்தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவையுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் காதலில் வெற்றி பெறலாம். இதனால் மோதல்களைக் குறைக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இல்லை.இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும். அதிக பணம் சம்பாதிக்கும் திறமை குறைந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.தொண்டை சம்பந்தமான எரிச்சல் காணப்படும்.குளிர்சியான உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று பயணங்கள் ஏற்படலாம்.இன்று பிறருடன் தொடர்பு கொள்வதில் குறைபாடு காணப்படும்.உணர்ச்சி வசப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படாது.சக பணியாளர்களிடம் சுமுகமான உறவு நிலை காணப்படாது.

உங்கள் பிரியமானவருடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது.உணர்ச்சி வசப்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்து காதலை மகிழ்ச்சியாக்குங்கள்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய் நேரலாம்.வீண் செலவுகள் ஏற்படலாம்.

பதற்றம் காரணமாக கால்களில் வலி காணப்படும்.ஆரோக்கியத்தை நல்ல நிலையில் வைத்திருக்க தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும்.சௌகரியங்கள் குறைந்து காணப்படும். பொறுமையுடன் கையாண்டால் எதையும் எளிதாக முடிக்கலாம்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருக்கும்.குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் பிரியமானவருடன் மோதல்கள் காணப்படும்.நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் குறைந்து காணப்படும்.அதனால் உங்கள்அடிப்படைதேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம். இன்று சிறப்பான நாளாக அமையாது.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. அசௌகரியங்கள் மற்றும் செலவுகள் காணப்படும்.




இன்று உங்கள்செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.நல்ல வளர்ச்சி காணப்படும்.உங்கள்விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள்.

இன்று பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான நல்ல வாய்ப்புகளும் இன்று கிடைக்கும்.

உங்கள் பிரியமானவருடன் நல்லுறவு காணப்படும். உங்கள் துணையிடம் அன்பான வார்த்தைகளை பரிமாறிக்கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு சௌகரியமாக இருக்கும். நீங்கள் நிதி விடயத்தில் சுதந்திரமாக விரும்பியதை செய்ய இயலும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள்இன்று பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.மேலும் முக்கியமான பணிகளை ஆற்ற வேண்டியிருக்கும். எந்தச் செயலையும் ஒரு முறைக்கு இருமுறை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது.பணிச்சுமை அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு சிறிது பதற்றத்தை உருவாக்கும்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு எழும். ஒற்றுமையை தக்க வைக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

ஆன்மீக பயணம் காரணமாக பணத்தை செலவு செய்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு இருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் தந்தையாருக்கு சுவாசப் பிரச்சினை காணப்படும். எனவே அவரின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கும். இன்று அதிக சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.என்றாலும் உங்கள் சமயோசித புத்தியினால் உங்கள் செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.

இன்று புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.அது உங்களுக்கு புதிய சவாலாக இருக்கும்.இந்தச் சவாலை நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு காணப்படும். விஷயங்களை இலேசாக எடுத்துக் கொண்டு உறவை நல்லுறவாக ஆக்க வேண்டும்.

இன்ற வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பணம் சேமிப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன.

நீங்கள் சிறிது பதற்றமாகக் காணப்படுவீர்கள். செரிமானக் கோளாறுகள் காணப்படும். சரியான நேரத்தில் உணவு மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். உங்களது சூழ்நிலையைக் கண்டு உணரச்சிவசப்படாதீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணிகள் திறம்பட செயலாற்ற இயலாது.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் வேறு வேலையைத் தேடுவீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் இன்று விவாதத்தில் ஈடுபட நேரலாம். நிலைமை மோசமாகாமல் தடுக்க அதனை தவிர்ப்பது நல்லது.

நிதிவளர்ச்சி இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. தேவையற்ற கூடுதலான செலவினங்களை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்ப அங்கத்தினர்களின் மருத்துவ செலவிற்காக நீங்கள் செலவு செய்ய நேரும்.இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.புதிய நபர்கள் மற்றும் நண்பர்களின் தொடர்பு கிடைக்கும்.இன்று முழுவதும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் இன்று திருப்திகரமான நிலை காண்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள்இன்று காற்றில் பறப்பது போல உணர்வீர்கள்.காதல் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

# இன்றைய ராசி பலன்கள் -27.07.2025




இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. புத்தி சாலித்தனமாக செயலாற்றுவதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம்.

பணிசார்ந்த பயணங்கள்இன்று சாத்தியம்.உங்கள் சகபணியாளர்க ளிடம் நல்ல உறவுமுறை பராமரிப்பது அவசியம். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது முக்கியம்.

உங்கள் பிரியமானவருடன் உங்கள் உறவை பராமரிக்க விரும்பினாலும் சில சமயங்களில் நீங்கள் மனநிலையை இழப்பீர்கள்.

இன்று பண விடயத்தில் உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதீர்கள். நிதி சம்பந்தமான முடிவுகளை அடுத்த நாளிற்கு தள்ளிப் போடுங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.தலைவலி உபாதைக்கு ஆளாவீர்கள். மனதை ஓய்வாக வைத்திருங்கள்.




இன்று மந்தமான நாள். உங்கள் செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் கவலைகள் அதிகரிக்காமல் இருக்க தேவையற்ற எண்ணங்களை கைவிடுங்கள்.

இன்று பணியிடச்சூழல் சாதகமாக இருக்காது.பணியில் அதிக தவறுகள் ஏற்படும். அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் பொறுமை இழப்பீர்கள். கேள்விப்படும் வதந்திகள் உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உரையாடும் போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

இன்று பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது.பணம் கையாள்வதில் சில சிக்கல்களை நீங்கள் உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம்சிறப்பாக இருக்காது. தொண்டை எரிச்சல் மற்றும் சளி போன்ற உபாதைகள் காணப்படும்.




இன்று செய்யும் அனைத்து செயல்களிலும் நடைமுறை அணுகுமுறையை கையாள வேண்டும். உங்களை உற்சாகப்படுத்திக்கொள்வதன் மூலம் சோர்வை வென்று நம்பிக்கையுடன் இருக்கலாம்.

அதிக பணிச்சுமை கவலையை அளிக்கும். இது பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தும். இந்த உணர்வு காரணமாக உங்களால் திறமையாக பணியாற்ற இயலாது.

நீங்கள் விஷயங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நல்லுறவிற்கு எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் அணுகுமுறை தேவை. குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

நிதிவளர்ச்சி திருப்தி அளிக்கும் வகையில் இருக்காது. பண இழப்புகளுக்கான வாய்ப்புகள் இன்று காணப்படும்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம். சரியான நேரத்தில் உணவு உட்கொள்வது பலனளிக்கும்.




இன்று பலன் தரும் முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். இன்று உறுதியும் தைரியமும் உங்களிடம் காணப்படும்.

சக பணியாளர்களிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். பணியில் நல்ல பெயர் எடுப்பீர்கள்.

உங்கள் துணையுடனான பேச்சிலும் செயலிலும் இனிமை காணப்படும். இது உங்கள் உறவுப் பிணைப்பபை வலுவாக்கும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று பணத்தை சேமிக்கவும் இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று அனைத்தும் உங்களுக்கு சிறப்பாக காணப்படுவதால் நீங்கள்ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# நாத்தாண்டிய வகஹப்பிட்டியவில் லொறி விபத்து



**(உடப்பு க.மகாதேவன்)**

நாத்தாண்டிய வகஹப்பிட்டிய பிரதேசத்தில் கோழிப் பண்ணைகளுக்கான பொருள்களை விநியோகம் செய்து வந்த லொறி ஒன்று புரண்டு விபத்துக்குள்ளாகிய சம்பவம் நேற்று முன்தினம் பகல் இடம்பெற்றுள்ளது. இதன் போது வாகனம் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.



